**ட்ரூபல்-க்கான வழிமுறை தாள்**
**ஸ்போகன் டுடோரியல் குழு**
**ஐஐடி பாம்பே**

## 1 பயிற்சி செய்வதற்கான வழிமுறைகள்

1. ஸ்போகன் டுடோரியல்கள் மற்றும் file கள் அடங்கிய ஒரு தொகுப்பு உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
2. பொதுவாக ஒரு சமயத்தில் ஒரு டுடோரியலைப் பயிற்சி செய்யவும்.
3. ஒரு ஸ்போகன் டுடோரியலை கேட்டுக்கொண்டே வீடியோவில் காட்டப்படும் அனைத்து படிகளையும் செய்து பார்க்கவும்.
4. மேற்சொன்னவற்றை செய்ய உங்களுக்கு சிரமமாக இருந்தால், முழு டுடோரியலையும் ஒரு முறை கேட்டுவிட்டு இரண்டாம் முறை கேட்டுக்கொண்டே பயிற்சி செய்யவும்.

## 2 ட்ரூபல்

1. உங்கள் கணினியில் `spoken` என்ற folder க்கு சென்று அதை திறக்கவும் (அது எங்குள்ளது என்பதை அறிய உங்கள் ஒருங்கிணைப்பாளரை(coordinator/instructor) அணுகவும்).
2. `index.html` file மீது ரைட்–க்ளிக் செய்து firefox/chrome browser ல் அதை திறக்கவும். Internet Explorer ஐ பயன்படுத்த வேண்டாம். அது ஸ்போகன் டுடோரியல்களுக்கு பொருந்தாமல் போகலாம்.
3. பின்வரும் படிகள் சரியாக வேலைசெய்யவில்லையெனில் உங்கள் browser ஐ சரிபார்க்கவும். IE ஐ பயன்படுத்திக்கொண்டிருந்தால், அதை மூடிவிட்டு Firefox/chrome ல் திறக்கவும்.
4. முதலில் முன்னிருப்பாக `Side-by-side Method` வீடியோ தோன்றும். இது ஒரு சுலபமாக கற்கும் முறையை விளக்குகிறது. இந்த டுடோரியலை முதலில் பார்க்கவும். ஸ்போகன் டுடோரியல் மூலம் ட்ரூபலைக் கற்க இந்த முறையை நீங்கள் பின்பற்றவேண்டும்.
5. திரையின் மேல் உள்ள "`Select Foss Category`"ன் drop-down ஐ க்ளிக் செய்து `"Drupal"` ஐ தேர்ந்தெடுக்கவும்.
6. `"Select Language"`ன் drop-down ஐ க்ளிக் செய்து எந்த மொழியில் நீங்கள் கற்க விரும்புகிறீர்களோ அந்த மொழியைத் தேர்ந்தெடுக்கவும்.
7. `"Submit"` பட்டன் மீது க்ளிக் செய்க.
8. நீங்கள் தேர்ந்தெடுத்தவற்றுக்கு ஏற்றவாறு டுடோரியல்களின் ஒரு பட்டியலைப் பெறுவீர்கள்.
9. காட்டப்பட்டும் பட்டியலில் முதல் டுடோரியலுடன் ஆரம்பிக்கவும்.

## 3 முதல் டுடோரியல்: Overview of Drupal

1. `"Overview of Drupal"` என்ற டுடோரியலுக்கு செல்லவும்.
2. இந்த டுடோரியலில் ட்ரூபல் பற்றியும் இந்த ட்ரூபல் தொடர் மீதான மேலோட்டப் பார்வையையும் காண்போம்.
3. டுடோரியலின் பேச்சு வடிவத்திற்கு உரை வடிவம்(subtitle text) வேண்டுமெனில் `spoken` folder ல் உள்ள `README.txt` file ல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.
4. இந்த டுடோரியலின் ப்ளேயரைக் க்ளிக் செய்து அதை காணவும்.
5. இந்த டுடோரியல் முடிந்தவுடன், ப்ளேலிஸ்ட் விண்டோவில் அடுத்த டுடோரியலான `Installation of Drupal` ஐ க்ளிக் செய்யவும்

## 4 இரண்டாம் டுடோரியல்: Installation of Drupal

1. `"Installation of Drupal"` என்ற டுடோரியலுக்கு செல்லவும்.
2. இந்த டுடோரியல் `Drupal 8` ஐ `Bitnami Drupal Stack` ஐ பயன்படுத்தி Windows OS மற்றும் Ubuntu Linux OS ல் எவ்வாறு நிறுவுவது என விளக்குகிறது.
3. உங்கள் கணினியில் `Bitnami Drupal` ஐ உங்கள் system administrator ஏற்கனவே நிறுவி இருக்கலாம்.
4. Side-by-side method ஐ பின்பற்றி பயிற்சி செய்ய, டுடோரியல் உள்ள web browser ன் அளவை குறைத்து கணினித்திரையின் இடது பாதியில் வைக்கவும். வலது பாதியில் file browser/explorer ஐ திறந்து வைக்கவும்.

5. நீங்கள் லினக்ஸ் பயனர் எனில் டுடோரியலில் நிமிடம் 6.50 வரை தவிர்த்துவிட்டு நிமிடம் 6.51 ல் இருந்து வழிமுறைகளைப் பின்பற்றவும். நிமிடம் 7.09 ல் டுடோரியல் உங்களை drupal-8.1.3-0 folder ஐ திறக்கச்சொல்லும். உங்கள் கணினியில் ட்ருபலின் புதிய பதிப்பை நிறுவியிருந்தால் இந்த folder பெயரில் வெறு எண்கள் இருக்கும். அதை திறக்கவும்.
6. விண்டோஸ் பயனார்கள் டுடோரியலில் நிமிடம் 7.26 வரை தவிர்த்துவிட்டு, நிமிடம் 7.27 ல் இருந்து வழிமுறைகளைப் பின்பற்றி Bitnami Drupal Manager Tool ஐ திறக்கவும்.
7. Server களைத் துவக்க வழிமுறைகளைப் பின்பற்றவும்.
8. நிமிடம் 8.33 ல் Go to Application ஐ க்ளிக் செய்யும் போது Bitnami Drupal Stack உடன் ஒரு புது விண்டோ திறக்கும். பதிலாக அது புது tab ல் திறந்தால், அதை புது விண்டோவில் திறக்க அதை க்ளிக் செய்து இழுத்து வெளியே விடவும்.
9. Side-by-side method ஐ பின்பற்ற, மேற்சொன்ன Bitnami Drupal Stack விண்டோவின் அளவைக் குறைத்து அதை கணினித் திரையின் வலது பாதியில் வைக்கவும்.
10. ட்ருபல் வெப்சைட்டின் முதல் பக்கத்தைத் திறக்க Access Drupal ஐ க்ளிக் செய்யவும்.
11. நிமிடம் 9.00 வரை டுடோரியலை பின்பற்றி பயிற்சி செய்யவும். இங்கு Username ஐ admin எனவும் Password ஐ drupal8gr8 எனவும் கொடுக்கவும் (இவை வேறுப்பட்டிருந்தால் உங்கள் ஒருங்கிணைப்பாளரை (coordinator/instructor) அணுகவும்).
12. இந்த டுடோரியலைத் தொடந்து பின்பற்றி முடிக்கவும்.

## 5 மூன்றாம் டுடோரியல்: **Content Management in Admin Interface**

1. Web server கள் இயங்கவில்லை எனில் அல்லது login செய்யவில்லை எனில், Section 4 ல் படிகள் 5 முதல் 11 ஐ பின்பற்றி
   (a) Server களை துவக்கி ட்ருபலின் முதல் பக்கத்திற்கு செல்லவும்
   (b) admin ஆக login செய்யவும்

   ட்ருபல் வெப்சைட்டை நீங்கள் புதிதாக திறக்கும்போதெல்லாம் மேற்சொன்னவற்றை நீங்கள் சரிபார்க்க வேண்டும். கணினியை நிறுத்துதல், ப்ரௌசரின் cache ஐ சுத்தம் செய்தல் ஆகியவையும் server களை நிறுத்தும், logout உம் செய்துவிடும். மற்றபடி முன் டுடோரியலில் இருந்து நீங்கள் தொடரலாம்.
2. நடப்பு டுடோரியலின் ப்ளேயருக்கு கீழே Code files பகுதி உள்ளது. அதை க்ளிக் செய்து (ZIP archive) தரவிறக்கவும். இது இந்த டுடோரியலுக்குத் தேவையான logo.png file ஐ கொண்டுள்ளது. அதை உங்கள் folder ல் சேமித்து டுடோரியலில் சொல்லியவாறு பயன்படுத்தவும்.
3. இந்த டுடோரியலை முடித்த பிறகு, Assignment பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை செய்யவும். இது நீங்கள் கற்பதை வலுப்படுத்தும்.

## 6 பின்வரும் டுடோரியல்களைப் தொடர வழிமுறைகள்

பகுதி 5 ல் கொடுக்கப்பட்ட முறையைப் பின்பற்றி அனைத்து ட்ருபல் டுடோரியல்களையும் முடிக்கவும். குறிப்பாக ஒவ்வொரு டுடோரியல்களுக்கும் பின்வருவனவற்றை செய்யவும்:

1. Server கள் இயங்கவில்லை எனில் அவற்றை துவக்கவும்
2. Login செய்யவில்லை எனில் admin ஆக login செய்யவும்
3. Code files ஐ தரவிறக்கி உங்கள் folder ல் சேமித்து பயன்படுத்தவும்
4. Assignment ல் உள்ள பயிற்சிகளை செய்யவும்

## 7 உங்கள் ஆங்கிலப்புலமையை மேம்படுத்துதல்

1. இந்த டுடோரியல்களை மற்ற பல மொழிகளிலும் மொழிமாற்றம் செய்துள்ளோம். உங்களுக்கு டுடோரியலை ஆங்கில மொழியில் கற்க சிரமமாக இருக்கலாம். அப்படியெனில் அந்த மொழிமாற்ற டுடோரியல்களை பயன்படுத்தவும்.
2. ஆங்கிலம் தவிர்த்து வேறு ஒரு மொழியில் நீங்கள் டுடோரியல்களை கற்றிருந்தால், அவற்றை மீண்டும் ஆங்கிலத்தில் கற்கவும். இது உங்கள் ஆங்கில புலமையை வளர்க்க உதவும்.
3. இந்த டுடோரியல்களை இங்கு இல்லாத வேறு மொழியில் நீங்கள் மொழிமாற்றம் செய்ய விரும்பினால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.